மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) ஆம். புதியதாக ஏற்படுத்தப்பட்ட காமராஜர் மற்றும் அண்ணா மாவட்டங்களில, மத்திய அரசின் நிதியுதவியுடன் இரண்டு புதிய மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவுவதற்கு கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) மத்திய அரசின் அங்கீகாரமும், நிதியுதவியும் எதிர் பார்க்கப்படுகிறது.

பனைமரங்கள் அழிக்கப்படுவதற்குத் தடை

695—(*வினா எண், 8989) திரு, எப், எம், இராசரத்தினம் மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயன்தரும் நிலையில் உள்ள பனைமரங்கள் அழிப்பதைத் தடைசெய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) இல்லை

ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

(முற்பகல் 9—50)

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரங்களில் பதனீர் இறக்குகிற பணியைச் செய்பவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது. பனை மரங்களை வைத்திருக்கின்ற தனியார் உடமையாளர்களுக்கு நல்ல பலன் கிடைக்காத காரணத்தாலே விறகுக்கும் மற்றும் பல்வேறு தேவைகளுக்கும் பனைமரங்கள் பெரும்பான்மையாக அழிக்கப்பட்டு வருகின்றன. இப்படியே போனால் இன்னும் 50 அல்லது 100 ஆண்டுகளில் பனைமரங்களையே பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்படலாம். எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு பயன் தரும் நிலையில் உள்ள இந்தப் பனைமரங்களை அழிக்கக்கூடாது, வெட்டக் கூடாது என்று சுற்றறிக்கை ஏதேனும் வெளியிட, ஆணை வெளியிட அரசு அறிவுறுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களை, பச்சை மரங்கள் உட்பட பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு

மலைப்பகுதி மரங்கள் பாதுகாப்புச் சட்டம் 1955-ன் படியும தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம் 1949ன்படியும் மரங்களை முன் அனுமதியின்றி அழிக்கக்கூடாது என்று இருக்கிறது. இதில் பனைமரங்களும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பதனீர் இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இன்றையதினம் இந்தப் பதனீர் இறக்கும் தொழிலில் 1,69,000 பேர் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பனைமரம் இப்போது அதிகமாக வெட்டப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு எந்த இடத்தில் பனைமரங்கள் வெட்டப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினால் அரசு அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் பரவலாக பனை மரங்கள் வெட்டப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பனைமரங்கள் அழிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றுவதற்காக நவீன விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு குட்டையான ஒட்டுப் பனைமரங்களை ஆண்டுதோறும் பதனீர் தருகின்ற மரங்களை, பலன் தரும் மரங்களை உற்பத்தி செய்கின்ற வகையில் பனைமரக் கன்றுகளை விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்தும் நோக்கம் ஏதேனும் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரம் எந்த இடத்தில் வெட்டப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குட்டைப்பனைமரம் பற்றி இப்போது ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்குச் சொந்தமான தோப்பிலே தங்களுடைய சொந்த உபயோகத்திற்காகப் பனைமரங்களை வெட்டினாலும் அரசாங்கம் வழக்கு போடுகிறது. அந்தமாதிரி வழக்கு போடுவது நியாயமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் பதில் கூறிய போது எடுத்துக் கூறி இருக்கிறேன். அரசுக்குச் சொந்தமான

புறம்போக்கு நிலங்களிலுள்ள சிறிய மற்றும் பச்சை மரங்களை வெட்டினால் வனத்துறைச் சட்டத்தின்படி குற்றமாகும். ஆனால் சொந்த நிலங்களிலுள்ள பனை மரங்களை அவர்கள் வெட்டிக்கொள்ளலாம். அதைப்பற்றி அரசு ஒன்றும் நடவடிக்கை எடுக்காது. அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் உள்ள பச்சை மரங்களை வெட்டினால்தான் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடைபொத்தை குளத்திற்கு நீர்வரத்து

696.—]*வினா எண். 3293) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி பகுதியில் அமைந்துள்ள இடைபொத்தை குளத்திற்கு ஆதியான் குளத்திலிருந்து கால்வாய் அமைத்து மணிமுத்தார் பெருங்கால் தண்ணீர் பெறச் செய்யும் பணி எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இடைபொத்தை குளத்துக்கு ஆதியான் குளத்திலிருந்து கால்வாய் அமைத்து மணிமுத்தாறு பெருங்கால் தண்ணீர் பெறச் செய்யும் பணிக்கான செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

நண்டலாற்றுக்குத் தாமதமாக நீர்வரத்து

697—*வினா எண்) 3809).—திரு. என். விஜயபாலன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி தாலுகா 175 திருக்களாச்சேரி வட்டம் பாலூர் கிராமத்தில் பாயும் நண்டலாற்றிற்கு ஒரு மாதம் கழித்தே தண்ணீர் வருவதால் அப்பகுதி விவசாயம் பாதிக்கப் படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) வீரசோழன் ஆற்றிலிருந்து கோவிந்த களகம் உபரி நீர்ப்போக்கி மூலம் பாசன நீர் அவ்வப்போது வழங்கப்படுகிறது.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 175 திருக்காளச்சேரி வட்டம் பாலூர் கிராமத்திற்கு நண்டலாற்றிலிருந்து ஒரு மாதம் கழித்துத்தான்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS